Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -18 | 03-07-2003 | வியாழக்கிழமை | ஓசை 135

நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்
நலிவுற்றோருக்கு உதவுவோம்
கொடிவாரம்
01.07.2003 - 21.07.2003
சமுதாய முன்னேற்ற நிலையம், தலைமைச் செயலகம், கிளிநொச்சி.

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப்புலிகள் மிகஉறுதியாக உள்ளனர்!

## பிரதமர் ரணிலிடம் வன்னி வந்து சென்ற ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதான பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள அதேவேளை வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர் என சிறிலங்காவிற்கான ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கூறியுள்ளார்.**

வன்னியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிசிரோ ஒட்சுகா நேற்றுக் காலை விரிவாக விளக்கிக் கூறினார்.

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும் பட்சத்திலேயே விடுதலைப்புலிகள் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளும் சாத்தியம் இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் அந்த இடைக்கால நிர்வாக சபையின் ஊடாகவே இடம்பெற வேண்டும் என புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

அரசாங்கத்தின் ஊடாக வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளுக்கான அரசாங்கத்தின் திட்டத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குப் பகுதிக்கு இடைக்கால நிர்வாகம் வழங்க வேண்டும்

### அஸ்கிரிய பீடாதிபதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் வழங்குவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று அஸ்கிரிய பீடாதிபதி மகாநாயக்கர் உடவல புஞ்சி தர தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகம் பற்றியும் அதன் அதிகாரங்கள் தொடர்பாகவும் சிலர் பிரச்சினைகளை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்த அவர்,

தமிழ் மக்களினதும் அரசாங்கத்தினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து அதற்கு ஏற்றவாறு

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளை

வடமராட்சி மயிலந்தனைப் பகுதியில் பாரிய கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 27ஆம் திகதி வெளிநாட்டிலிருந்து

(08ஆம் பக்கம் பார்க்க)



கரும்புலி நாளை முன்னிட்டு

## திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி கிராமந்தோறும் பவனி

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு முல்லை. மாவட்டத்தில் கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி பவனி நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

தாயக விடுதலைப்போரில் இதுவரை வீரச்சாவடைந்த கரும்புலிகள் அனைவரினதும் திருவுருவப்படத்தைத் தாங்கியவாறு மக்களின் வணக்கத்திற்காக முல்லை. மாவட்டத்தின் சகல இடங்களுக்கும் இவ் ஊர்தி செல்கிறது.

வவுனியாவில் கரும்புலிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களப் படைகளின் போர்நிறுத்த மீறல்கள் பொறுமையைச் சோதிக்கும் அளவிற்கு வந்துவிட்டது!

### புலிகளின் உத்தியோகபூர்வ ஏடு தெரிவிப்பு

புலிகள் இயக்கத்தின் பொறுமையைச் சோதிக்குமளவிற்குச் சிங்களப் படைகளின் போர்நிறுத்த மீறல்கள் எல்லை கடந்துவிட்டன என விடுதலைப்புலிகள் இயக்கத்தின உத்தியோகபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் ஏடு தெரிவித்துள்ளது.

நேற்று வெளியாகிய இவ் ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது: அனேகமான மீறல் சம்பவங்கள் புலிகளைச் சீண்டி சண்டைக்கிழுக்கும் உள்நோக்கத்துடன் செய்யப்படுகின்றன. சமாதானச் சூழலைக் குழப்பி போர்ச் சூழலை உண்டுபண்ண சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்றனர்.

ஒருபுறம் போர்நிறுத்த மீறல்களைச் சந்திரிக்கா அம்மையார் தூண்டியும் தானே முன்னின்று நடத்தியும் வருகிறார். மறுபுறம் இத்தகைய மீறல் சம்பவங்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காது வெறும்பார்வையாளரின் மனநிலையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உள்ளது.

சிங்களத்தின் இந்த அரசியல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பிரதேச கரும்புலிகளின் பெற்றோர் நேற்று கௌரவிப்பு

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத் திற்குட்பட்ட கரும்புலிகளின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக் காலை 11.30 மணிக்கு பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது. வை. நளாயினி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை பூநகரி அரசியல் துறையைச் சேர்ந்த சிவா ஏற்றினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. குருக்கள் மடத்துறையடியில் மக்கள் மீது சோதனைக் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குருக்கள் மடத்துறையடியில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் சோதனைக்கெடுபிடிகள் அதிகரித்துள்ளது.

அம்பலாந்துறை குருக்கள் மடப்படகுச் சேவையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் மக்களினது பொதிகள் சோதனைக்குள்ளாக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்பு குறிப்பிட்ட இப்பகுதியில் சோதனைக்கெடுபிடிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் தற்பொழுது மீண்டும் சோதனைக் கெடுபிடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மண்முனைத் துறையிலும் விசேட அதிரடிப்படையினர் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமை நிரந்தரத் தளமாக மாற்ற நடவடிக்கை

### ஜோசப் எம்.பி ஆட்சேபம்

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவில் கல்லடியில் அமைந்துள்ள படை முகாமை நிரந்தர முகாமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவது குறித்து மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். தற்போது போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் முகாமைப்பலப்படுத்த நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வைப்பாதிக்கும் என்றும் ஜோசப் எம்பி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பாக படைத்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் பதிலளிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜோசப் எம்.பி.யிடம் தெரிவித்துள்ளார். இதேவேளை, மண்முனை வடக்குப் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு விபரங்களைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பதிவு அட்டை உடன் பெற்றுக் கொள்க

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் குடும்பப்பதிவு அட்டை தேவைப்படுவதனால் இதுவரை காலமும் குடும்பப்பதிவு அட்டை பெற்றுக் கொள்ளாதோரும் சரியான தரவுகளுடன் குடும்பப்பதிவு அட்டை வைத்திருக்காதோரும் உடன் தங்கள் பிரதேசங்களில் உள்ள குடும்பப்பதிவு அட்டைச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு குடும்பப்பதிவு அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டைப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

(லோ)

## அரசாங்கம் ஒருபோதும் யுத்தத்தில் இறங்கமாட்டாது

### அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

(கொழும்பு)

அரசியல் லாபம் தேடும் சில சக்திகள் நாட்டை யுத்தப் பாதையில் இட்டுச்செல்லத் தூண்டி வருகின்ற போதிலும் அரசாங்கம் ஒருபோதும் யுத்தத்தில் இறங்கமாட்டாது என சிறிலங்காவின் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

காலி கரந்தெனிய மத்திய கல்லூரியில் கணினிப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை நிலைநாட்ட அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் தற்போது வடக்கில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

அருந்தவநாதன் ஜீவேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 11.06.03 அன்று கிளிநொச்சி நகரப்பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக கொள்கிறேன். (3412)

### வேவு விமானம் நோட்டம்

முல்லைத்தீவு கரையோரப்பகுதியில் நேற்றுமுன் தினம் காலை 8.30 மணியில் இருந்து காலை 10 மணி வரை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வேவுவிமானம் நோட்டமிட்டுச் சென்றது. (20)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று மல்லாவி

வழ.இல: 35/02.
தன்மை: நானாவிதம்.
பெறுமதி: 61000/=

ஆழ்வார் யோகன்,
சந்தை உட்புறம்,
மல்லாவி.
- வழக்காளி.

ஏரம்பு பூரணம்,
சந்தை உட்புறம்,
மல்லாவி.
- எதிராளி.

### அறிவித்தல்

மேற்படி வழக்கில் இத்துடன் பிரசுரிக்கப்படும் இடைக்காலத் தீர்வையில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இவ் அறிவித்தல் பிரசுரத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தவறின் இவ் இடைக்காலத் தீர்வை முற்றாகத் தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

வரைவு: லோகநாதன்
வழ/சட்டவாளர்.

(3415)

## காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யும் அதே இடத்திலான சேவை

இதுவரையும் பதிவு செய்யப்படாத காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகளை பதிவு செய்யும் பொருட்டு வடக்கு-கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் அவர்கள் எதிர்வரும் 08ஆம், 09ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகைதர உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறியத்தந்துள்ளார்.

எனவே இதுவரையும் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யாதவர்கள் உரிய ஆவணங்களை அந்தந்த கிராம அலுவலர்களின் சிபாரிசுடன் பிரதேச செயலாளரின் அறிக்கையையும், பாடசாலை அதிபரின் அறிக்கை, ஊசி அட்டை, சாதகக்குறிப்பு, சகோதரர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பெற்றோரின் திருமணச் சான்றிதழ் என்பவற்றுடன் உரிய பிரதிக்கிணைய பூர்த்தி செய்து கீழ்க் குறிப்பிடப்படும் தினத்தில் அந்தந்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இவ் இறுதிச்சந்தர்ப்பத்தை தவறவிடாது சகலருக்கும் இதனை அறிவிக்குமாறு கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

08-07-2003 மு.ப. 9.00 மணி பிரதேச செயலகம் பூநகரி
08-07-2003 பி.ப. 1.00 மணி பிரதேச செயலகம் கண்டாவளை
09-07-2003 மு.ப. 9.00 மணி பிரதேச செயலகம் கரைச்சி.

**நா. செல்வராசா**
**மேலதிக மாவட்டப் பதிவாளர், கிளிநொச்சி.**

(சி-8197)

## மேற்பார்வையாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

பின்வரும் தகைமைகள் உடைய ஆண் பாலோர் மேற்படி பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

அ. கல்வித்தகைமை- க.பொ.த. [உயர்தரம்] கற்றிருத்தல்
ஆ. அகவை- 25 தொடக்கம் 40 வரை
இ. உயரம்- 5 அடி 3 அங்குலம்.

**குறிப்பு:-**

அ. விண்ணப்ப முடிவுநாள்- 15.07.2003
ஆ. அடிப்படை மாத ஊதியம்

$$\frac{4500\text{-}5700}{10 \times 110} + 2000 = 6500.00$$

இ. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு 26.07.2003, 27.07.2003 ஆகிய இரு நாட்களில் தமிழீழப் போக்குவரவுக்கழகம் புதுக்குடியிருப்புப் பணிமனையில் நடைபெறும்.

ஈ. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வி,அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

உ. விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி,முழங்காவில், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஊ. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பட்டறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8194)

## முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபை நடாத்தும்

### மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2003

தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையுடன் தமிழீழ நிர்வாக சேவையின் ஆதரவுடனும் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையும், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து 81வது சர்வதேச கூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள போட்டியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

**போட்டிகள்**

1) துவிச்சக்கரவண்டி ஓட்டம் (40 மைல் 18,44பல்வீல்)
பதிவுக்கட்டணம்250 ரூபா
2) மரதன் ஓட்டம் – (20 மைல்)
பதிவுக்கட்டணம் 25 ரூபா

**விண்ணப்பமுடிவுத் திகதி** :- 14.07.2003 (திங்கட்கிழமை)

**போட்டி நடைபெறும் திகதி** :- 19.07.2003 சனிக்கிழமை துவிச்சக்கரவண்டி ஓட்டம் உடையார்கட்டுச் சந்தியில் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.
(உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு)
20.07.2003 ஞாயிற்றுக்கிழமை மரதன்ஓட்டப் போட்டி காலை6.00 மணிக்கு இரட்டை வாய்க்கால் சந்தியில் ஆரம்பமாகும்.
(இரட்டை வாய்க்கால் சந்தி, வலைஞர்மடம், பொக்கணை, புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வதியும் போட்டியாளர்கள் விண்ணப்பிக்கலாம். இவ் போட்டியாளர்கள் தனிப்பட்டவர்கள் ஆயின் தனிப்பட்ட ரீதியிலும் கழக அங்கத்தவர்கள் ஆயின் கழகங்கள் மூலமும் அல்லது நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் ஆயின் நிறுவன ரீதியிலும் விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவுத் திகதிக்கு முன்னதாக (14.07.2003) மாவட்ட செயலாளர், மாவட்ட கூட்டுறவுச்சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்: மா.சுபாஸ்கர்,
மாவட்ட செயலாளர்,
மாவட்ட கூட்டுறவுச்சபை,
புதுக்குடியிருப்பு.

(சி-7758)

## MINISTRY OF TERTIARY EDUCATION AND TRAINING

### SKILLS DEVELOPMENT PROJECT
### CIVIL WORKS

TENDER CONDITIONS & INSTRUCTION TO TENDERERS
TENDER FOR CIVIL WORKS AT INFORMATION TECHNOLOGY CENTER AT

### NAITA, MULLAITIVU

1.0 Tender documents will be issued to intending Tenderers from 04.07.2003 to 09.07.2003 at the office of the Zonal Education Office, Mullaitivu.

2.0 A Tender deposit of Rs. 1,140/= will be required to be made at the Zonal Education Office, Mullaitivu and a receipt produced for the same before any form of tender is issued. The Tender deposits of Persons who fail to tender will be forfeited and will be appropriated to revenue.

3.0 All tenders should be submitted in duplicate, sealed under one cover and should be addressed to

The Zonal Director of Education,
Zonal Education Office,
Mullaitivu.

3.1 Tenders should be either deposited in the tender ox or sent by post under registered cover.

3.2 Tenders should be marked "Tender for Renovation work at NAITA, Mullaitivu".

3.3 Any tender received after the closing time will be rejected. Also the Authority reserves the right to reject any or all tenders without ascribing any reasons for such rejection.

4.0 Tenders will be opened at ..........on ........ at Zonal Education Office, Mullaitivu Tenderers or their duly authorized representatives may be present at the time of opening of tenders. The tendered amount only in respect for each tender opened will be read out to those present at the time of opening of the Tenders.

5.0 All blank spaces should be filled and signed in the appropriate lace, except the forms of agreement which need not be filled.

6.0 All alterations in tenders must be initialed by tenders. No erasures will be permitted.

7.0 Tenders must write the total amount of Tender in figures as well as in words.

8.1 All tenders should be accompanied by a Bid-Bond acceptable to the Tender Board, which should not be less than one percent (1%) of the total tender value. Further particulars regard to this Tender may be obtained at this Office during Office hours.

T. GURUKULARAJAH,
Zonal Director of Education,
Mullaitivu.

(சி-8217)

# பெத்தலேகேம் நகரிலிருந்து படை விலகல்; பலஸ்தீனத்திடம் கையளிக்க இணக்கம்!

## யூதக்குடியிருப்புகளும் அகற்றப்படவுள்ளன

**பெத்தலேகேம் நகரில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ள இஸ்ரேல் முடிவு செய்துள்ளது. இந்த நகரம் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.**

அமெரிக்கா மேற்கொண்ட முயற்சியினால் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனும் பலஸ்தீனப் பிரதமர் மகமுத் அபாசும் நேற்று முன்தினம் பெத்தலேகே மில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதில் தீவிரவாத அமைப்புக்கள், வன்முறைகளை நிறுத்துவதாக அறிவிக்கப்பட்டது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர்பெத்தலேகேம் நகரில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷில்வன் ஷவோன் தெரிவித்துள்ளார். பலஸ்தீனப்பகுதிகளிலுள்ள யூதக் குடியிருப்புகளை அகற்றவும் இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இதேவேளை, மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக இஸ்ரேல், பலஸ்தீன பிரதமர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

ஜெருசலேமில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அங்கிருந்த தொலைக்காட்சி மூலம் தங்களது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே ஏரியல் ஷரோனும், மகமூத் அபாசும் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாட்டு மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக ஏரியல் ஷரோன் கூறியுள்ளார். 1967ஆம் ஆண்டு போரின் போது இஸ்ரேலியர்களால் கைப்பற்றப்பட்ட பகுதியிலுள்ள பலஸ்தீனர்களை ஆட்சிபுரியவோ, அவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கவோ இஸ்ரேல் விரும்பவில்லையென்றும் அவர் மேலும் கூறியுள்ளார். எனினும் பலஸ்தீனர்களது பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால் நிரந்தர சமாதானம் ஏற்படுவது சாத்தியமல்ல என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் மோதல்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பென பிரதமர் அபாஸ் கூறியுள்ளார்.



கிழக்கு ஜெருசலேமிலுள்ள யூதக் குடியேற்றப் பகுதியின் தோற்றம்.

## பொலிஸ் தாக்குதலில் எண்மர் பலி!

நைஜீரியாவில் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன் தினம் இரண்டாவது நாளாக இடம்பெற்றவேளை அங்கு ஆர்ப்பாட்டம் செய்தோரை அடக்கும் முகமாக பொலிசார் மேற்கொண்ட தாக்குதலில்08 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்கு எரிபொருள் விலை உயர்வை கண்டித்தே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.



நசரத்திலுள்ள பிரதான கிறிஸ்தவ ஆலயத்தின் அத்திவாரத்தை இடித்தழிக்கும் இஸ்ரேலிய "பெக்கோ" இயந்திரம் (இதன்காரணமாக வத்திக்கானில் மதச்சார்பு பதட்டநிலை தோன்றியுள்ளது. நீதிமன்றத்தின் அழிப்பு அனுமதியுடன் வந்த முஸ்லிம்களுக்கும் பொலிசாருக்கு மிடையில் மோதலுமஏற்பட்டது. நூரிரி ந்நக்கது.)

## அணுசக்தி அமைப்பின் பரிசோதகர்களுக்கு ஈரான் வருமாறு அரசாங்கம் அழைப்பு!

(தெஹ்ரான்)

சர்வதேச அணுசக்தி அமைப்பின் பரிசோதகர்கள் மீண்டும் தம் நாட்டில் வந்து அணு ஆயுத பரிசோதனையை நடத்துவதற்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.

அணு ஆயுத உற்பத்தித் தடை ஒப்பந்தத்திலிருந்து ஈரான் விலக முடியாது என்று ஈரானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜெக்ஸ்றோ எச்சரித்திருந்ததை அடுத்தே ஈரான் அணு ஆயுத பரிசோதகர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஈரானிய செய்தி நிறுவனமான இர்னாவுக்கு தெரிவித்துள்ள ஈரானிய தேசிய பாதுகாப்புச் சபைத் தலைவர் ஹெஸன் ரவ்ஹொனி ஈரானிலுள்ள தொழில்நுட்ப ரீதியிலான குறைபாடுகளைக் கண்டறிவதற்காகவே ஈரான் மீண்டும் சர்வதேச அணுசக்தி அமைப்பில் அணு ஆயுத கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாக அறிவித்துள்ளார். ஆனால் தொழில்நுட்ப ரீதியிலான குறைபாடுகள் என்ற ஹஸன் ரவ்ஹொனி அவை எத்தகைய குறைபாடுகள் என்பதை அறிவிக்க மறுத்துவிட்டார்.

ஆனால் இத்தகைய தொழில்நுட்பக் கோளாறுகள் என்ற விடயத்தைக் காரணமாக வைத்து ஈரானை அமெரிக்கா சுரண்டும் நடவடிக்கையில் ஈடுபட முனையக்கூடாதென கூறியுள்ளார்.

## கருணாநிதிக்கு அழைப்பாணை

(சென்னை)

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா கொலை தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்த கருத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட அவதூறு வழக்கில் அவர் ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நேரில் ஆஜராக வேண்டுமென்று சென்னை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாகப்பா கொலைக்கு தமிழக அரசின் மெத்தனப்போக்கே காரணம் என கடந்த டிசம்பர் மாதம் கருணாநிதி கூறியதையடுத்து இந்த அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சனாதிபதி உட்பட முக்கிய தலைவர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை

(புதுடில்லி)

இந்திய சனாதிபதி அப்துல்கலாமின் உயிருக்கு தீவிரவாதிகள் குறி வைத்திருப்பதால், அவருக்கு அதிக பட்ச பாதுகாப்பு அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சனாதிபதி அப்துல்கலாம் அண்மையில் காஷ்மீர் சென்றிருந்த போது அவரைக் கொல்ல லஸ்கரி தொய்பா தீவிரவாதிகள் முயற்சி மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அப்துல்கலாமின் பாதுகாப்புக் குறித்து டில்லியில் மத்திய உயரதிகாரிகள் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

அப்போது அப்துல்கலாமின் காவல் படையில் இனி வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யும் ஜாவர் எனப்படும் தொலைத்தொடர்பு கருவி பொருத்திய வாகனம் இடம் பெறுவதுடன், கலாமின் பாதுகாப்புப் படையினருக்கு நவீனரக துப்பாக்கிகள், கண்ணிவெடிகளை அகற்றும் கருவிகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் வாஜ்பாயின் பாதுகாப்புக் குறித்தும் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தலைவர்களுக்கு பாதுகாப்பைப் பலப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சட்டவிரோதக் குடியேறிகள் அவுஸ்திரேலியாவில் கைது

அவுஸ்திரேலியாவுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட வியட்னாம் நாட்டைச் சேர்ந்த 54 அகதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திலேியாவுக்குள் வரும் அகதிகளைக் குறைக்கும் வகையில் அந்நாடு கடுமையான சட்ட திட்டங்களை வகுத்துள்ளது.

அனுமதியின்றி அந்நாட்டிற்குள் நுழைபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படுகின்றது.

இந்நிலையில் அந்நாட்டின் மேற்குக் கடற்கரையோரப்பகுதியில் ஊடுருவிய படகு ஒன்றை அந்நாட்டு பாதுகாப்புப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

அப்படகில் 08 சிறுவர்கள், ஒரு குழந்தை உட்பட 54 பேர் இருந்தனர். இவர்கள் அனைவரும் வியட்னாமைச் சேர்ந்தவர்கள். அகதிகள் கைது செய்யப் பட்டதை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

## அரச ஊழியர்கள் போராட்டம்

தமிழகத்தில் அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க கூட்டமைப்பினர் நேற்று முதல் தமிழக அரசிற்கெதிராக காலவரையறையற்ற வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டு வருகின்றார் கள்.

தமிழக அரசின் தலைமைச் செயலகம், மாவட்ட தலைநகரங்கள், கோட்ட அலுவலகங்கள், நீதிமன்றங்கள், கல்லூரிகள், பாடசாலைகள் போன்றன அனைத்துமே ஊழியர்கள் ஆசிரியர்களின் வருகையின்மையில் வெறி சோடிக்கிடப்பதாகக் கூறப்படுகின்றது.

தமிழக அரசின் கடுமையான எச்சரிக்கைகளையும் மீறி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நேற்று 90 வீதமான ஊழியர்கள் மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஹொங்கொங் அரசு பிரகடனப்படுத்தியுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எரிக்கப்பட்ட கம்ப,னிஸ்ட் கொடியை அணைக்கும் ஹொங்கொங் பொலிசார்.



கொரியாவில் ரயில் போக்குவரத்தை மறுசீரமைக்கும் கொரியாவின் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் தொழிலாளர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட கலவரம்.

அயோத்தி பாபர் மசூதி வளாகத்தில் வெகு விரைவில் ராமபிரானுக்கு ஆலயம் எழுப்பப்படும். அதற்கு தடையாகவுள்ள எல்லாப் பிரச்சினைகளையும், தடைகளையும் உடைத்தெறிய பிரதமர் வாஜ்பாயும், துணைப் பிரதமர் அத்வானியும் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும். இல்லையேல் பதவி விலக வேண்டும் என அதிரடியான எச்சரிக்கையை விஸ்வ ஹிந்து பரிஷத் விடுத்துள்ளது.

வியூகம் தான் விஸ்வஹிந்து பரிஷத்தின் சூளுரைப்பும், பிரதமர், துணைப் பிரதமரை சாடலும், "நான் அடிப்பது போல் அடிக்கின்றேன் நீ அழுவது போல் அழுது காரியம் சாதித்துக் கொள்" என்பதே வியூகத்தின் முதற்படி என்றும், சாதுக்களின் கொந்தளிப்பை வைத்து நீதிமன்றத்தை தமக்கு சாதகமாக்கிக் கொள்வதே திட்டம் என எதிர்க் கட்சிகள் முணுமுணுக்கின்றன.

எனவே, ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி சமுதாயத்தை, நாட்டைப் பிளவு படுத்தும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்து கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகாது.

அத்துடன் மாநிலங்களில் எங்கு திரும்பினாலும் கட்சிகள் தூக்கிக் கொண்டு திரிவது சின்னங்களையல்ல. ஆயுதங்களைத் தான். இவையே நாளடைவில் கட்சியின் சின்னங்களாக மாறினாலும் வியப்பெதுவுமில்லை

இல்லை என்றும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இதனிடையே காஞ்சி சங்கராச்சாரியார் சமரசத் திட்டமொன்றை முஸ்லிம் வாரியத்திற்கு வழங்கியதை விஸ்வஹிந்து பரிஷத் கடுமையாக எதிர்ப்புக் கூறியுள்ளது.

அத்துடன் காங்கிரஸ் கட்சியோ காஞ்சி சங்கராச்சாரியாரின் சமரசத்திட்டம் என்பது வடமாநிலத் தேர்தலை உள்ளடக்கியது என்றும், அவரது சமரசத் திட்டத்தை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றும் பிடிவாதம் பிடிக்கின்றது.

அத்துடன் முஸ்லிம் வாரியம் ஆறாம் திகதி இந்த சமரசத் திட்டத்தை பரிசீலிக்கவுள்ள நிலையில், ராமர் கோயில் கட்டியே

# வடமாநில தேர்தலுக்குள் அயோத்தி...

"இவர்கள் எப்படிப் பதவிக்கு வந்தார்கள்... என்பதை பதவியேற்றதுமே மறந்து விட்டார்கள். நாங்களெல்லாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். நடுத்தெருவில் நாங்கள் அவர்களோ பதவியின் மயக்கத்தில் மூழ்கிப் போயுள்ளார்கள்.

வாஜ்பாயை பொறுத்தவரை எல்லாம் அவரால் முடியும். ஆனால் கோயில் கட்டுவதும், அதற்கான சட்டமும் மட்டுமே இயலாத காரியமும், மறக்கப்பட்ட விடயமும் ஆகும்.

அத்வானியை பொறுத்தவரை உள்துறை



அமைச்சரான போது சர்தார் பட்டேல் போல் இரும்பு மனிதர் என்று எண்ணியே அயோத்தி வரை ரதயாத்திரை சென்றோம். பதவி கிடைத்து விட்டது. எல்லாமே தற்போது மறக்கப்பட்டுவிட்டது." என விஸ்வஹிந்து பரிஷத்தின் சந்நியாசிகள் வார்த்தைகளை கூர்தீட்டி பாய்ச்சுகின்றார்கள்.

இதனால் அயோத்தி இன்னும் ஒரு மாதமோ... ஒரு வாரமோ... அனலாகக் கொதிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை என எல்லோரிடமும் அச்சம் எழுந்துள்ளது.


மதசார்பின்மை சின்னத்தில் இந்துத்துவா

ஏனெனில் அயோத்தி விவகாரம் அன்று தொட்டு இன்று வரை எங்காவது தேர்தல் என்றால் மட்டுமே பெரிய பூதாகரமாக உருவெடுக்கும். மற்றையபடி அது வெறும் காற்றுப் போன பலூன் தான் எனும் கருத்து அவதானிகளிடையே நிலவி வருவதால்,

தற்போது மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கார், டெல்லி ஆகிய வடமாநிலங்களில் தேர்தல். அதனை தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல்.

எனவே, வடமாநில தேர்தலை நோக்கிய

ஏற்கனவே ராஜஸ்தானில் திரிசூலம் வழங்கியுள்ளமையும், மத்திய பிரதேசத்தில் சூலாயுதம் வழங்கியுள்ளமையும் தேர்தலை நோக்கிப் பயணிக்கும் அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகள்தான் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், வாக்காளர்களை கவர எடுக்கும் முயற்சிகள் எதிர்க்கட்சிகளையும் கவரும் அல்லது சீண்டிப் பார்க்கும் என்று எதிர்பார்க்கலாம் தானே...

அந்த வகையில் இந்துத்துவா என்பது பா.ஜனதா கட்சிக்கு மட்டும் ஏகபோக உரிமையுடையதா என்ன... அது எங்களுக்கு மட்டும் சொந்தமில்லையா... என காங்கிரஸ் கட்சியும் களமிறங்கி இருக்கின்றது. இது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல.

ஏனெனில் குஜராத் தோல்வி மதசார்பின்மை மகுடத்திற்கு கிடைத்த தோல்வியே எனும் கருத்து நிலவுவதால், இனி வரும் தேர்தல்களில் காங்கிரஸ் மதசார்பின்மை மகுடத்திற்கு இந்துத்துவாவையும் சேர்ப்பது பற்றி சிந்திக்குமென எப்போதோ அக்கட்சி கூறிவிட்டது.

அந்த வகையில் தான் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை அணி திரட்டிய காங்கிரஸ் அவர்களுக்கு கோடரி வழங்கியுள்ளது.

அடுத்து மத்திய பிரதேசத்தில் பசுவைக் கொன்றுவிட்டதாக இனக்கலவரம். சரஸ்வதி ஆலயத்தை இடித்து விட்டு கட்டப்பட்டதே மசூதி என இந்துத்துவா சக்திகள் போர்க் கொடி தூக்கி நிற்கின்றன.

இதனால் கலவரம் ஏற்படாது தடுக்க இந்திய தொல்பொருள் கழகம், செவ்வாய்க் கிழமை இந்துக்கள் சரஸ்வதியை வழிபடலாம் எனவும், வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் தொழுகை நடத்தலாம் எனவும் கூறியுள்ளதை, இருபகுதிகளும் முற்றாக ஏற்றுக் கொள்ளாமல் முறுக்கிக் கொண்டு தான் நிற்கின்றன.

இதனால் எப்போது அங்கே கலவரம் வெடிக்குமோ... எனும் பீதி நாளும் நிலவிக் கொண்டுதான் இருக்கின்றது.

இதேபோல் தான் மத்திய பிரதேச மற்றொரு பகுதியான போபாலில் உள்ள அனுமன் ஆலயத்தில், அனுமனது ஜெயந்தி விழா என்று பா.ஜ.கட்சி உமாபாரதி அனுமன் கருவறைக்குள் நுழைந்து கேக் வெட்டியுள்ளார் என்று,

இதனைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு காங்கிரஸ், கேக் வெட்டுவது இந்து கலாச்சாரமா...?, கேக் முட்டைகளால் ஆனதே...?, பெண் கருவறைக்குள் நுழையலாமா...? என போர்க் கொடி தூக்கிக் கொண்டு, ஆலயத்தை தூய்மையாக்குகின்றோம் என்று காவிப் பணியில் இறங்கியுள்ளார் காங்கிரஸ் முதல்வர் திக்விஜய்சிங்.


சங்கராச்சாரியாரிடம் ஆசிபெறும் அத்வானி

என்று அவதானிகள் முகத்தை சுழித்துக் கொள்கின்றனர்.

இந்நிலையில் விஸ்வ ஹிந்து பரிஷத் தமக்கு அரசியல் ஆசை இல்லை; ஆட்சிப் பீடம் ஏறும் அவா இல்லை; ஆனால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தியாவை இந்து நாடாக மாற்றுவோம். மதசார் பற்ற கொள்கை பேசுபவர்கள் பேசிய மறுகணம் மரண தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும், நாங்கள் நினைத்தால் எப்போதோ அயோத்தி யில் ராமர் கோயில் கட்டி இருப்போம். அத்வானிதான் ரதயாத்திரை நடத்தி ஆலயப் பிரச்சினைக்குள் அரசியலைக் கலந்து விட்டவர் எனப் போட்டு உடைக்கவும் தொடங்கியுள்ளது.

இந்த கோபக் கர்ச்சனை உண்மையானதா... அல்லது பொய்யானதா... என்பதே தற்போதைய வினா.

ஏனெனில் விஸ்வஹிந்து பரிஷத்தும் ஆளும் கட்சியும் இணைபிரியாத இரட்டைக் குழந்தைகள் எனும் கருத்து அரசியலில் நிலவி வருகின்றது. அப்படி இருக்கும் போது இந்த நிலையில் மாற்றம் என்பது சாத்தியமா... என்பது வினாவாகும் தானே...


மறுபுறம் அயோத்தியைக் காட்டி ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதா கட்சி, இதுவரை கோயில் கட்டுவதற்கு சிறு துரும்பைக் கூட கிள்ளிப் போட்டதில்லை.

தீருவது என்று விஸவஹிந்து பரிஷத் எதிர் வாதம் புரிகின்றது.

தற்போதைய நிலையில் சங்கராச்சாரியாரின் சமரசத் திட்டம், அதை எதிர்க்கும் விஸ்வ ஹிந்து பரிஷத் ராமர் கோயிலை கட்டுவது எனும் பிடிவாதம், வடமாநிலத் தேர்தல் இந்துத்துவாவை கையில் எடுத்துள்ள காங்கிரஸ் என்பன ஆளும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு தலைவலி கொடுக்கும் சிக்கல்கள் ஆகும்.

இந்தச் சிக்கல்களை பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி இருவரும் எவ்வாறு தீர்க்கப்போகின்றார்கள்..?

அயல் நாடுகளுடனான சிக்கல்களைத் தீர்க்க முற்படும் பிரதமர் முதலில் மாநிலப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுக்க வேண்டும் என்பது அரசியல் வட்டாரத்தில் நிலவும் கருத்து ஆகும்.



அப்படியானால் பாரதிய ஜனதா ஆட்சியில் இருக்கும் வரை அயோத்தி சிக்கல் தானா.... என்பது பலராலும் எதிர்பார்க்கப்படும், அடுத்த விடை தேடும் வினாவாகும்.

அதே நேரம், இதுவரை கோயில் கட்ட பா.ஜனதா முயற்சி எடுக்காமையினால் விஸ்வ ஹிந்து பரிஷத் தற்போதைய நிலையில் கொதிக்க ஆரம்பித்து இருக்கலாமோ... எனும் அச்சமும் இருக்கின்றது.

அதனால் தான் போலும் விஸ்வ ஹிந்து பரிஷத் கோயில் கட்டுவதற்கு சட்டம் கொண்டு வா. இல்லையேல் பதவி விலகு என எச்சரித்துள்ளது.

ஆனால் பாரதிய ஜனதாவோ ராமர் கோயில் கட்டுவது என்பது நீதிமன்ற உத்தரவினாலோ, அல்லது பேச்சுக்களின் மூலமோ தான் சாத்தியமாகும். அத்துடன் சனநாயகக் கொள்கை வகுப்பில் இத்தகைய திட்டம்

எனவே வடமாநில தேர்தல் வருவதற்குள் விஸ்வஹிந்து பரிஷத்தை எப்படியாவது குளிர்வித்தே ஆக வேண்டும். அது என்ன வழி என்பது பாரதிய ஜனதாக் கட்சிக்கே வெளிச்சம்.

மறுபுறம் இதுவரை மதசார் பின்மை என்று முழங்கிவந்த காங்கிரஸ், வடமாநிலங்களில் இந்துத்துவாவை ஒழிவு மறைவு இன்றி கையிலெடுத்துள்ளதே இது வெற்றிக்கு வித்திடுமா.. என்பது பரபரப்பாக எதிர்பார்க்கப்படுவதொன்றாகும்.

சங்கராச்சாரியாரின் சமரசத் திட்டம் நன்மையளிக்குமா.. முஸ்லிம்வாரியம் ஏற்குமா... என்பதுடன், எல்லாவற்றையும் எதிர்க்கும் விஸ்வஹிந்து பரிஷத்தின் அடுத்த கட்ட நிலைப்பாடு தான் என்ன என்பதே பெரிய புரியாத புதிராகும்.

அ. கலைவாணி

# இடைக்கால நிர்வாக யோசனையை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்க முடிவு!

## - பொதுச் செயலாளர் ஹசன் அலி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் அரசாங்கம் வழங்கவிருக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இரகசியமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இவ் யோசனையின் பிரதியொன்று மு.கா.விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நேர்வே அரசினூடாக புலிகளிடம் இன்னும் சில தினங்களில் கையளிக்கப்படவுள்ள மேற்படி யோசனையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பற்றி எதுவும் குறிப்பிடப்படாமையே இவ்வெதிர்ப்புக்குக் காரணமாகும் என கட்சியின் பொதுச் செயலர் ஹசன் - அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவசரமாக கூடிய மு.காங்கிரஸ் தீவிரமாக கலந்தாலோசித்துள்ளதாகவும் இது பற்றி முடிவெடுப்பதற்காக ஐந்து பேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு சபையினதும், மாவட்ட அமைப்பினதும், உபகுழுவினதும் உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளினதும் அரசினதும் அங்கத்தவர்களாக மட்டுமே இருப்பதனால் முஸ்லிம் பிரதேசங்களில் பாரிய அசௌகரியங்கள் ஏற்பட இடமுண்டு எனவும் கூறப்படுவதாக செய்தி தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை இடைக்கால யோசனையில் சேர்க்க வேண்டும் என அரசை வலியுறுத்தவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இதற்கு சாதகமான முறையில் அரசு செயற்படாவிடில் அரசுக்கான அதன் ஆதரவை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கொலையாளிகள் கைது

(கொழும்பு)

கூலிக்காக செய்யப்பட்ட 12 கொலைகளோடும் பல குற்றச்செயல்களோடும் தொடர்புடைய பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் முக்கிய புள்ளி ஒருவரின் கையாட்களாவர் என பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர்கள் கடுவெல வெல்லம்பிட்டிய, ராஜகிரிய போன்ற இடங்களில் இடம்பெற்ற கொலைகளுக்குக் காரணமானவர்களாவர்.

மேலும் பல காலமாக வியாபாரிகளை மிரட்டி அதிகளவில் பணம் வசூலித்து வந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# இத்தாலி செல்ல முயன்ற 259 பேர் தென்னிலங்கைக் கடலில் கைது

(கொழும்பு)

**சட்டவிரோதமாக இத்தாலியில் குடியேறச் சென்ற 259 பேர் தென்னிலங்கைக் கடலில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். தங்காலைக் கடலில் வைத்து 187 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 185 பாகிஸ்தானியர்களும் இரண்டு இலங்கையர்களும் அடங்குவதாகக் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.**

தங்காலைக் கடற்படையினரும், இரகசியப் பொலிசாரும் கூட்டாக இணைந்து இவர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். இதேவேளை, மிக்மல்ல பொலிசாரும் இத்தாலி செல்ல முற்பட்ட 72 பேரைகுடாவல்லக் கடல் நீரேரியில் வைத்துக் கைது செய்துள்ளனர். இவர்களில் 71 பேர் பாகிஸ்தானியர், ஒருவர் இலங்கையர் இவர்களின் அனைவரும் 30 வயதைவிடவும் குறைவானவர்கள். இவர்களின் சாட்சியங்கள் பதியப்பட்ட பின்பு இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று மிக்மல்ல பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக்கப்பல் மாலைதீவில் பதிவு செய்யப்பட்டதென ராய்ட்டர் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கப்பலின் தலைமை மாலுமி ரஷ்யபிரஜை எனவும் ஏனையோர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டவர்களை இலங்கை ஊடாக சட்டவிரோதமான முறையில் கடலினூடாக இத்தாலிக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்நாட்டு பிரதிநிதிகள் இருவரை பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர்.

தற்போது இவர்கள் இருவரும் தமது இருப்பிடங்களைவிட்டு தலைமறைவாகியுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இக்கப்பல் தற்போது காலி துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புனரமைப்பு

கண்டாவளை பிரதேச செயலர்பிரிவில் உள்ள பெரிய குளம் கட்டைக்காடு வீதிஉலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக் கப்பட்டு வருகிறது.

பெருமளவு மக்கள் இவ்வீதிப் புனரமைப்புவேலைகளில் ஈடுபட்டுள்ளனர். (14)

## 81 சட்டவிரோத குடியேறிகள் டியூனிசியாவில் தடுப்பு!

இத்தாலி நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்ட இலங்கையர் உட்பட 81 பேர் டியூனிசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இத்தாலி நோக்கி 250 குடியேற்றக்காரர்களுடன் சென்று கொண்டிருந்த படகொன்று டியூனிசியா கடற்பரப்பில் மூழ்கிய போது அதிலிருந்தவர்களில் 200 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து கடற்பரப்பில் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டிருந்த அந்த நாட்டுக் கடற்படையினர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இத்தாலி நோக்கி 81 குடியேற்றக்காரர்களுடன் சென்று கொண்டிருந்த படகொன்றை வழிமறித்துப் பிடித்தனர்.

இதில் இலங்கை, கானா, ஐவரி கோஸ்ற், லைபீரியா மற்றும் மொராக்கோ நாட்டவர்கள் இருந்துள்ளனர். லிபியாவிலிருந்தே இப்படகு புறப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. தலா 800 டொலர்கள் செலுத்தி இவர்கள் இத்தாலி நோக்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சு.கட்சி – ஜே.வி.பி. உடன்பாடு இம்மாதம் 15 இல் கைச்சாத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்குமிடையிலான கூட்டு உடன்படிக்கை வரும் 15ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

46 பக்கங்களைக் கொண்ட இந்த உடன்படிக்கையில் சிறி.சு.கட்சி சார்பில் அதன் செயலர் மைத்திரிபால சிறிசேனாவும், ஜே.வி.பி.யின் சார்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும் கையொப்பமிட இருக்கின்றனர்.

இவ் உடன்படிக்கையைத் தொடர்ந்து மூன்று மாதங்களில் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள சனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிககப்படுகிறது.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரை நீக்குமாறு கோரி அனைத்து பல்கலைக கழக மாணவர்களும் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

துணைவேந்தர் பல்கலைக்கழக மாணவர்களின் சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்கின்றார் என்றும் அதனால் அவரை நீக்க வேண்டும் என்றும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இது சம்பந்தமான மகஜர் ஒன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## புகையிரதப் பாதைகளைச் சீர்செய்ய 1.5 பில்லியன் தேவையென மதிப்பீடு

(கொழும்பு)

நாடு பூராகவுமுள்ள புகையிரதப் பாதைகளைச் சீர்செய்ய 1.5 பில்லியன் ரூபா தேவை என புகையிரதத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார்.

அதிகாரிகளின் தவறான பராமரிப்புக் கொள்கையால் தண்டவாள சிலிப்பர் கட்டைகள் பல காலங்களாக மாற்றியமைக் கப்படவில்லை, இதனால் புகையிரதப் பாதைகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளதால் முழுமையாகப் பழுதுபார்க்கப் படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் 1035கி.மீ நீளமான பாதைகளில் 375 வேகக் கட்டுப்பாட்டுத்தடை இடங்களைக் கொண்டுள்ளது. இவை பழுதுபட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புகையிரதப் பெட்டிகள் ஒவ்வொன்றும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சுத்திகரிப்புச் செய்யப் படவேண்டும். இவ்வாறு 260 பெட்டிகள் திருத்தப்படவேண்டிய தேவை இருக்கிறது.

புகையிரத திணைக்களத்திற்கு எந்த ஒரு வசதி வாய்ப்புக்களும் இல்லை. அளவுக் கதிகமான பொருட்கள் தேவைப் படுவதால் அவற்றைத் திருத்துவ தற்கு அதிக செலவு செய்ய வேண்டியுள் ளது. இதனால் திருத்த முடியாமல் உள்ளது.

கந்த சில காலமாக நூறுக்கும் மேற்பட்ட புகையிரதத் தடம் புரள்வுகள் இடம்பெற்றுள்ளன.

107 புகையிரதங்கள் தடம்புரள்வுகள் 2000 ஆம் ஆண்டில் பதிவு செய் யப்பட்டுள்ளது.

பல தடம்புரள்வுகள் இந்த வருடத்தின் முதல் சில மாதங்களிலேயே சம்பவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரியாலை மாம்பழ சந்தியில் புதிய படைமுகாம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை மாம்பழ சந்தியில் சிறிலங்காப் படையினர் மீண்டும் புதியமுகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

பாவனையிலில்லாத தனியாருக்குச் சொந்தமான இரு மாடிகளைக் கொண்ட வீடொன்றில் கடந்த வாரம் முதல் முகாம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வீட்டு வளவைச் சுற்றி முட்கம்பிகள் போடப்பட்டு காவலரண்கள் அமைக்கும் படையினர் அங்கு காவல் கடமையிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

## இளைஞர்களுக்குப் பயிற்சி சுதந்திரக்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் தொகுதியொன்றிலிருந்து க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த நூறுபேர் வீதம் நாட்டிலுள்ள அனைத்து தொகுதிகளிலும் உள்ள சிறில.சு.கட்சியைச் சேர்ந்த இளைஞர்களைத்திரட்டி அவர்களுக்கு அரசியலில் பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சனாதிபதியின் அனுமதியுடன் அனுரா பண்டாரநாயக்கவால் இத்திட்டம் அமுலாக்கப்படவுள்ளது. இதற்காக விசேட பயிற்சி நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இளம் அரசியல் தலைவர்களை உருவாக்குதலே இதன் நோக்கம் என்று சுதந்திரக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்க புலம்பெயர்ந்தோரின் உதவிபெற முயற்சி!

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளில் புலம் பெயர்ந்த இலங்கைச் சமூகத்தினரின்-ஆற்றல்களைப் பயன்படுத்துவதற்கான தேவை குறித்து விசேட கவனம் செலுத்துமாறு இலங்கைத் தூதரகங்களின் தலைவர்களை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெனாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் விசேடமாக இலங்கைத் தூதரகங்களில் அமைககப்பட்டுவரும். பொருளாதாரக் கவுண்சில்களில் கூடுதலான அளவுக்குச் செயலகத்துடன் புலம் பெயர்ந்த இலங்கைச் சமூகத்தவர்களை ஈடுபடுத்த வேண்டிய தேவையை அமைச்சர் டிரோன் பெனாண்டோவைத் தலைவராக ஏற்றுக் கொண்ட வெளிநாட்டு வர்த்தக மேம்படுத்தல் தொடர்பான அமைச்சரவை உபகுழுவினால் வகுக்கப் பட்டுள்ள விரிவான தந்திரோபாயத்திட்டம் தெளிவாக அங்கீகரித்திருக்கிறது.

## வைத்தியசாலைச் சிற்றூழியர்களின் லீவுகள் உடனடியாக ரத்து

வைத்தியசாலைச் சிற்றூழியர்களின் லீவுகள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. தமது கடமைகளுக்குத் திரும்பாத ஊழியர்கள் தாமாகவே விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் நேற்று முன்தினம் மாலை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிற்றூழியர்களின் வேலைநிறுத்தத்தால் வைத்தியசாலைகளின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்று. சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.




கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கான நேரடி ரயில் சேவை நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு மட்டக்களப்பை வந்தடைந்த புகையிரத்தைப் படத்தில் காணலாம்.

## விடுதலை

திருகோணமலை மேல்நீதிமன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல்செய்யப்பட்ட மூன்று வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்களை நீதிபதி விடுதலை செய்துள்ளார்.

பேராறு கந்தளாய் வாசியான நாகப்பன் சுந்தரலிங்கம், பன்குளம் வாசியான கதிரேசுப்பிள்ளை சிவகுமார், யாழ்ப்பாண வாசியான அன்ரனி சுதாகர் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## ஆனி உத்தர விஞ்ஞாபனம்

உருத்திரபுரம் சக்திபுரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து மாரி அம்பாள் ஆலய ஆனி உத்தரவிஞ்ஞாபனம் எதிர்வரும் 6.7.2003 ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. அபிசேக ஆராதனை அன்னதான நிகழ்வுகள் என்பன இடம்பெற உள்ளதோடு கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலயநிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## துவிச்சக்கர வண்டியில் இருந்த கைப்பை திருட்டு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த திங்களன்று றெட்பானா வள்ளுவர்புரம் பகுதியில் கடந்த திங்களன்று நண்பகல் வேளையில் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

றெட்பானா பகுதியில் வசிக்கும் ஆசிரியை ஒருவர் துவிச்சக்கர வண்டியில் தனது கைப்பையை வைத்துவிட்டு தனது வீட்டுக்கதவை பூட்டுவதற்காக சென்றவேளை மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது. 7000 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பணமும் மற்றும் தேசிய அடையாள அட்டை பணியாளர் அடையாள அட்டை உட்பட சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய பையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. (லோ)

## பட்டிருப்புப் பாலத்திலும் சோதனை கெடுபிடிகள் அதிகரிப்பு

மட்டக்களப்புப் பட்டிருப்புப் பாலத்தில் கடந்த திங்கட்கிழமை யிலிருந்து சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து வருகை தரும் லொறிகளில் ஏற்றி வரப்படும் கற்கள் யாவும் சோதனைச் சாவடியில் இறக்கப்பட்டு மீண்டும் ஏற்றப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாத்தளை பதில் நீதவானின் கார் ரயர் திருட்டு


(மாத்தளை)

மாத்தளை மாவட்ட பதில் நீதவான் வி.கே.சிவராமலிங்கம் தமது காரின் ரயர் ஒன்றை திருடர்கள் களவாடியுள்ளதாக மாத்தளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தனது வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த காரின் ஒரு ரயரை இனந்தெரியாத சிலர் திருடிச் சென்றுவிட்டதாகவும் அதன் பெறுமதி 5 ஆயிரம் ரூபாய் எனவும் முறைப்பாடு செய்துள்ளார்.

# 4ம் ஆண்டு நீங்காத நினைவில்

ஜனனம்

06
04
1974



வீரச்சாவு

03
07
1999

## மேஜர் பொபி/நெடுங்கீரன்

(பொறுப்பாளர் களமருத்துவம்)

கார்த்திகேசு புஸ்பகாந்தன் [ஜீவா]

சங்கானை, யாழ்ப்பாணம்.

எண்சாண் உடம்பை வைத்து உய்வதற்கு
ஏதேதோ வழிகள் இருக்க
மண்மீட்புப் பணியே பெரிதென ஏற்று
மாண்ட மனிதருள் மாவீரன் பொபியும் ஆகி
நான்கு ஆண்டுகளாகிவிட்டன.

ஆற்றல் அமைதி அன்பு போன்ற
குணங்களால் போராளிகளை அணைத்த புலி
காற்றிலும் வேகமாய்க் களமருத்துவத்திற்காய்
பணியாற்றிய புலி – ஈற்றில்
தோற்றோடும் சிங்களத்திற்குத் துணைபோக வந்த
மோட்டார் குண்டிற்கு விதையாகி விட்டாய்
வீரா! நின் ஆத்மா சாந்தியடைய எமது
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரரையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

போராளிகள், பணியாள் மருத்துவக் களஞ்சியம்,

போராளிகள், களமருத்துவம்.

(சி-3244)



## சிந்தனைக்கு

சமூக நீதியும் சனநாயக சுதந்திரங் களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும்

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-07-2003

## ஆச்சரியம் தந்தது!

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற தமிழ் இளைஞர்கள் 27 பேரின் படுகொலைகள் தொடர்பாக ஐவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்பானது சிறிலங்காவின் நீதித்துறை வரலாற்றில் ஒரு மைல்கல் போன்றதாகும். அதிலும், குறிப்பாக இரு பொலிஸ் அதிகாரிகளுக்கும் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டமையானது அரசியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இத்தீர்ப்பானது ஒருவகையில் பார்த்தால் பெரும் ஆச்சரியத்திற்குரியதொன்று எனவும் கூறலாம். ஏனெனில், இனரீதியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றிற்கு நீதிமன்றம் விதித்துள்ள இக்கடுமை யான தீர்ப்பானது ஒரு முன்னோடித் தீர்ப்பாகும். இது வரையில் எத்தனையோ இனப்படுகொலைகள் சிறிலங்காவில் இடம்பெற் றுள்ள போதும், அதற்குப் போதிய சாட்சியங்கள் இருந்த போதும் இத்தகையதொரு தீர்ப்பு இது வரையில் வழங்கப்படாமையே இத்தீர்ப்பின் மேற்கூறப்பட்ட முக்கியத்துவத்திற்குக் காரணமாகும்.

இலங்கையில் இனரீதியாக எத்தனையோ படுகொலைச் சம்பவங்கள் இது வரையில் இடம்பெற்றுள்ளன. இதில் பெரும்பாலானவை நீதி விசாரணை என்ற எல்லையைக் கூடத் தொட்டதில்லை. சில படுகொலைச சம்பவங்கள் தவிர்க்கமுடியாத நிலையில் நீதிமன்றம் வரையில் சென்றன. ஆயினும், குற்றவாளி கள் தண்டிக்கப்படவில்லை. இதற்கு நீதி அமைப்பு முறையில் இருந்த குறைபாடு என்பது மட்டுமல்ல, அரசியல் ரீதியிலான தலையிடு, நீதிபதிகளின் இனரீதியான சார்பு நிலை என்பன காரணமாக இருந்துள்ளன.

ஆனால், தற்போதைய பிந்துனுவெவ படுகொலை தொடர்பான தீர்ப்பானது, இவற்றிற்கு அப்பாற்பட்டதாக வெளிவந்துள்ளது. அவ்வாறு வெளிவந்தமைக்கு-இவ்வழக்கானது யூரிமார்கள் அற்ற நிலையில் ட்ரயல்-அட்பார் முறையில் விசாரணைக்குட்பட்டமையும் காரணமாக இருக்கலாம். அத்தோடு நீதிபதிக்ளின் நடுநிலையான செயற்பாடும் காரணமாக இருக்கலாம். இந்த வகையில் இத் தீர்ப்பினை வழங்கிய நீதிபதிகள் (மூவர்) பாராட்டுக்குரியவர்களே.

இம்மரண தண்டனைத் தீர்ப்பில் இருந்து குற்றவாளிகள் மேல் முறையீடு செய்வதினாலோ அன்றி சனாதிபதியிடம் கருணை மனு சமர்ப்பிப்பதன் மூலமோ தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், இத்தீர்ப்பானது சரியான சட்ட ஆதாரங்களுடன் வழங்கப்பட்டதொன்று என்பது என சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது, இவர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையானது சட்ட ரீதியில் முற்றிலும் சரியானது என்பது அவர்களின் அபிப்பிராயமாகவுள்ளது.

இதேவேளை, இத்தகையதொரு தீர்ப்பானது தமிழ் மக்கள் மீது நிகழ்ந்தப்பட்ட ஆரம்பப் படுகொலைகள் தொடர்பாக வெளிவந்திருக்குமேயானால், இலங்கையின் அரசியல் வரலாறுகூட மாற்றம் கண்டிருக்கலாம். இனப்பிரச்சினை இத்தகையதொரு விஸ்வரூபம் எடுத்திருக்குமா? 'நாடு' இன்று சந்திக்கும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி வந்திருக்குமா? என்பவை கூட கேள்விக்குரியதாகவே இருந்திருக்கலாம். ஏனெனில், சிறிலங்கா நீதித்துறை தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கும் - சட்டத்தை மீறியதான இன ரீதியிலான நடவடிக்கைகளுக்கு நீதித்துறையில் கடும் தண்டனைகள் கிடைக்கும் என்ற பயம் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பிற்கும், இனவாதிகளுக்கும் ஏற்பட்டிருக்குமேயானால் இன்றைய மோசமான நிலை உருவாகாது போயிருக்கலாம்.

ஆனால், இந்நீதியானது மிகவும் காலம் கடந்தே கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கிடையில் சட்டத்தையும், நீதியையும் கையில் எடுத்துக் கொண்ட சிறிலங்காப் பொலிசாரும் ஆயுதப் படையினரும் குண்டர்களும் போதிய அளவில் அராஜகங்களைப் புரிந்து விட்டனர். அத்தோடு, அதிலிருந்தும் தப்பித்துக் கொண்டுவிட்டனர்.

ஆயினும், தற்போது வந்துள்ள தீர்ப்பானது இனிமேல் அராஜகத்திலும். இன அழிப்பு நடவடிக்கையிலும் இறங்குபவர்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக அமையக் கூடியதாகும். அதாவது, குற்றச் செயல்களுக்கு/சட்டத்திற்கு மீறிய செயல் களுக்கு அது இனவாத நோக்கிலாகிலும் சரி தண்டனைக்குரிய குற்றம் என்ற ரீதியில் எச்சரிப்பதாக அமையக் கூடியதாகும். இது அனைவரையும் சிந்திக்கத் தூண்டாது விடினும் சிலரையாவது சிந்திக்கத் தூண்டும் ஒன்றாக அமையக்கூடும்.

ஆனால், தற்போதைய தீர்பானது உதாரணத்திற்கு எடுத்துக் காட்டக் கூடியதொரு தீர்பாக மட்டுமே வெளிவந்துள்ளது. ஏனெனில் பலநூறு சம்பவங்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரே ஒரு தீர்ப்பே இதுவாகும்.

அத்தோடு, இதுபோன்ற தீர்ப்புக்கள் இனியும் தொடர்ந்து வருமா? இத்தகைய தீர்ப்பை வழங்கியவர்கள் இனவாத சக்திகளின் அச்சுறுத்தல்களையும் மீறி தொடர்ந்தும் இதேபோன்று நீதியை நிலைநாட்ட முனைவார்களா? முடியுமா? இத்தீர்ப்பு தொடர்பாக அரசியல் சக்திகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? என்பவையும் முக்கியமானதாகும். ஏனெனில், எதிர்காலத்திலும் இத்தகைய தீர்ப்புக்கள் வெளிவருவதை மேற்கூறப்பட்ட காரணிகள் தீர்மானிக்க வல்லவையாகும்.

# மக்களுக்கு அதிக சுமைகளை அளிக்காமல் அடுத்த வரவு-செலவுத் திட்டம் அமையும்

## - சிறிலங்கா பிரதி நிதியமைச்சர் அறிவிப்பு

மக்களுக்கு அதிக சுமைகளை ஏற்படுத்தாத வகையில் அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் என பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 18 மாத காலம் நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. சகல ஊழியர் களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் வரையில் பிரேரணை களும் வரவுசெலவுத் திட்டத்தில் இடம்பெறவுள்ளன என்று நேற்று நிகழ்வுவொன்றில் பங்கு பற்றிய அமைச்சர் குணவர்த்தன உரைநிகழ்த்தும் போது தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது பொருளாதாரம் பெருமளவு பின்னடைவு கண்டிருந்தது என கூறியவர், இவ்வருட இறுதியில் மொத்த உற்பத்தி 5.6 சதவீதமாக அதிகரிக்கும் எனக் கூறியுள்ளார்.

# ஆட்சியைக் கவிழ்த்து நாட்டைக் கட்டியெழுப்பவே சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி சேர்கிறோம்

## - ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

நாங்கள் கூட்டணி அமைப்பது தற்போது பதவியிலிருக்கும் அரசை கவிழ்த்துவிட்டு புதிய நடவடிக்கைகள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகும் என ஜே.வி.பி. எம்.பி.யான திமுது பண்டார கூறியிருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரோடு கூட்டணி அமைப்பது நிச்சயமாகிவிட்டது. அது அபிவிருத்தியடைந்து தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து மக்களை விடுவிப்பதற்கு ஏற்றகாலம் வந்துவிட்டது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2002ம்ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் நிர்மானிக் கப்பட்ட மின்வழங்கும் திட்டத்தைத் திறந்து வைத்துப் பேசிய கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திமுது பண்டார மேலும் கூறியதாவது; மாத்தளை மாவட்டத்தில் எமது கட்சியைச் சேர்ந்த ஒரு மாகாண சபை உறுப்பினரோ பாராளுமன்ற அங்கத்தவரோ இல்லாதபோதும் நாம் இப்பகுதிமக்களை மறந்துவிடவில்லை. எங்களுக்கு இம்மாதிரி அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியுமாயின் ஏன் ஆளும்கட்சி அமைச்சர்களுக்கோ எம்.பிக்களுக்கோ செய்ய முடியாது? என வினா எழுப்பிய அவர், மக்களின் ஒவ்வொரு சதத்தையும் அவர்களிடம் திருப்பி வழங்குவோம் நாம் ஒரு ரூபாயில் ஐந்து ரூபா பெறுவது மாதிரியான வேலைகளைச் செய்வோம் மற்றவர்களைப் போன்று அரைவாசியைப் பையில் போட்டுக் கொள்வதில்லை என்றார்.

# இலங்கையில் புகைத்தலைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டங்கள் அமுலாகும்!

## - சிறிலங்கா அரசாங்கம் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் புகைத்தல் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி அமைச்சரவை அனுமதியுடன் சட்டவாக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பி. தயாரத்ன தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகைத்தலை முற்றாகக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கைக்கு இலங்கை உட்பட 41 நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இலங்கையைப் புகைத்தல் அற்ற நாடாக மாற்ற புதிய திட்டம் கிடைத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் புகைத்தல் ஒழிப்புத் தொடர்பான தொற்று நோய்கள் விஞ்ஞானப் பிரிவினர் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் அமைச்சர் பி. தயாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்களின் சுகாதார நடவடிக்கைகளுக்கென அமைச்சு வருடாந்தம் 26 மில்லியன்களைச் செலவு செய்கின்றது. ஆனால் இலங்கையில் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் 10 முதல் 15 சதவீதமான நோயாளிகள் புகைத்தல் பாவனையால் ஏற்படும் மறைமுக பாதிப்புக்குள்ளானவர்களேயாவர். அத்துடன் இலங்கையில் சராசரியாக 20 சதவீதமான ரணங்கள் புகைத்தல் பாவனையினால் நிகழ்கின்றன.

## விம்பிள்டன் டென்னிஸில்

# அமெரிக்க-பெல்ஜியம் வீராங்கனைகள் அரையிறுதிக்குள் பிரவேசம்

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் பிரிவு அரையிறுதிக்குள் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், பெல்ஜியத்தின் கிம் கிளிட்டர்ஸ், ஜஸ்டின் ஹெனின் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் காலிறுதி ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் சகநாட்டு வீராங்கனை டெவன் போட்டை 6:2, 2:6, 6:1 எனும் செற்கணக்கில் வீழ்த்தியுள்ளார்.

அதே போல மற்றொரு ஆட்டத்தில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிட்டர்ஸ் இத்தாலி நாட்டைச் சேர்ந்த பாரினா எலியானாவை 5:7, 6:0, 6:1 எனும் செற் கணக்கில் வீழ்த்தியுள்ளார்.


மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சக நாட்டு வீராங்கனை ஜெனிபர் கப்ரியாட்டியை 2:6, 6:2, 6:3 எனும் செற்கணக்கில் வீழ்த்தியுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செபாஸ்ரக் குரோஸின் தம்மை எதிர்த்து விளையாடிய கார்லோ பெரெரோவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவின் கால் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் மகேஸ் பூபதி பெலாரஸின் மார்க்ஸ் போடி தகுதி பெற்றுள்ளது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், நிக்கிள் இணை 6:2, 6:7, 6:2, 6:3 எனும் செற் கணக்கில் ப்பிறைம் சகோதளரர்களை வீழ்த்தியுள்ளது.

அரையிறுதி மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் ஜஸ்டின் ஹெனின் செரீனா வில்லியம்சையும், வீனஸ் வில்லியம்ஸ் கிளிட்டர்சையும் எதிர்த்து விளையாடவுள்ளனர்.



# ஆப்கான் கிரிக்கெட் விருத்திக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு

ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் விளையாட்டை விருத்தி செய்வதன் பொருட்டு தேவையான ஒத்துழைப்பையும் பயிற்சிகளையும் மற்றும் உபகரணங்களையும் வழங்குமாறு புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள ஆப்கானிய கிரிக்கெட் சபைத் தலைவர் அல்லா டெட் நூரி இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெக்மோகன் டால்மியாவை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்போது டால்மியா அந்நாட்டுக்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

இதற்கு நன்றி தெரிவித்த நூரி காபூல் நகருக்கு வருகை தந்து கிரிக்கெட் விளையாட்டை வளர்ச்சியுற செய்யுமாறு டால்மியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# காவல்துறையின் சைகையை மதிக்காத சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் வேகக் கட்டுப்பாடு நடைமுறையை மீறிச் சென்ற வாகனத்தை நிறுத்த முற்பட்ட காவல்துறையினரை உதாசினம் செய்த சாரதிக்கு நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 30ஆம் திகதி வேகக்கட்டுப்பாட்டு நடைமுறையை மேற்பார்வை செய்து கொண்டிருந்த தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் குறிப்பிடப்பட்ட வேகக் கட்டுப்பாட்டு நடைமுறையை மீறி வந்து கொண்டிருந்த வாகனத்தைத் தடுத்து நிறுத்த முற்பட்டனர். இவ்வாறு நிறுத்துமாறு சைகை செய்யப்பட்ட போதும் அதனை உதாசினம் செய்து வாகனத்தை நிறுத்தாது சாரதி தொடர்ந்தும் ஓட்டிச் சென்றார். இதனைத் தொடர்ந்து காவல்துறையினர் மேற்படி வாகனத்தைத் துரத்திச் சென்று முறிகண்டிப் பகுதியில் வழிமறித்து மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி போக்குவரத்துப் பிரிவின் பணிமனைக்கு கொண்டு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து மறுநாள் காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் த.செந்தூரன் முன்னிலையில் போக்கு வரத்துப் பிரிவினரால் வாகனச் சாரதி முற்படுத்தப்பட்டவேளை, சாரதி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்ற ஒறுப்பு விசாரணையின் பின் குறித்த சாரதி 5000 ரூபா குற்றப்பணம் செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் 120 நாட்கள் கட்டாய சமூக சேவை செய்யவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடாது எனவும் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். (லோ)

# உயர்மட்ட நிவாரணக்குழு அமைக்க விரைவில் புதிய சட்டம்

(கொழும்பு)

பேரழிவுகள், அதற்கான நிவாரணம் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களைக் கவனிப்பதற்கான புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதென சனாதிபதி தலைமையிலான தேசிய நிவாரண முகாமைத்துவக் கவுண்சில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.முதன் முறையாக இக்கூட்டம் அதன் தலைவரான சனாதிபதியின் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

புதிய சட்டத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள உயர்மட்ட நிவாரணக் குழுவில் சனாதிபதியும், பிரதமரும் தலைவர் பதவிகளை வகிப்பர். நிவாரண முகாமைத்துவத்திற்கான அமைச்சரவை உபகுழு மனிதப் பேரழிவு முகாமைத்துவக் கவுண்சில் ஆகியனவும் புதிய உயர்மட்டக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளன.

# 'மகாவலி'யில் முதலீடு செய்ய இந்திய முதலீட்டாளர் விருப்பம்

(கொழும்பு)

மகாவலிப் பிரதேசத்தில் முதலீடு செய்வதற்கு இந்திய முதலீட்டாளர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் எஸ்.எல்.கம்பனி இங்கு முதலீடு செய்கின்றது. இக்கம் பனி பால் உற்பத்தியை மேற்கொள்ளும் இம் முதலீடு தொடர்பான ஒப்பந்தம் மகாவலி கால்நடை மற்றும் விவசாய கம்பனிகளுடன் செய்து கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான உடன்பாடு மூன்று மாதங்களுக்குள் கைச்சாத்திடப்படும் என சிறிலங்கா அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்திய கம்பனியின் பணிப்பாளர் தேவானந் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்; ஆரம்ப முதலீடாக பத்து மில்லியன் முதலிடப்படும் என தெரிவித்தார். இதன் அடிப்படையில் 3000 பசுக்கள் இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்படவுள்ளது.

### அரசாங்கம்...

படையினர் எவரும் உயிரிழப்பதில்லை.

பொருளாதார அபிவிருத்திக்கும் கல்வியை திருப்திகரமான மட்டத்தில் பேணிவருவதற்கும் அரசாங்கம் முன்னுரிமை வழங்கி வருகிறது.

அரசின் அபிவிருத்தி முயற்சிகளின் முன்னோடி நடவடிக்கையாகவே தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறுவப்படுகிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஐஸ்கட்டி தொழிற்சாலை நிர்வாகம் மகேஸ்வரன் - ஜெயலத் போட்டியால் பாதிப்பு

## - தொழிற்சாலையின் தலைவர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சீனோர் ஐஸ் தொழிற்சாலையை எந்த அமைச்சின் கீழ் கொண்டு வருவது என்பது தொடர்பாக முரண்பாடு நிலவுவதால் நிர்வாகத்தைச் செயற்படுத்த முடியாதுள்ளதாக அத் தொழிற்சாலையின் தலைவர் கூறியுள்ளார்.

இத் தொழிற்சாலையைப் பொறுப்பேற்பது தொடர்பாக இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரனுக்கும், புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் நிலவும் போட்டி காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இருந்து வந்த இந்த அமைச்சை இந்து கலாச்சார அமைச்சின் கீழ் வர வேண்டும் என ஒரு உத்தரவுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இது பிரதமரின் பணிப்பின் பெயரிலேயே இடம்பெற்றது. இதனையடுத்து ஜெயலத் ஜெயவர்த்தனா இதனை ஆட்சேபித்து கடிதமனுப்பியதைத் தொடர்ந்து இந்த இழுபறி நிலை தோன்றியது.

இதனாலேயே இந்த நிறுவனத்தின் நிர்வாக அமைப்புக்களைச் செயற்படுத்த முடியாதுள்ளது என்றும் அதன் தலைவர் கூறியுள்ளார். (33)

### கொள்ளை..:

வருகை தந்த ஒருவரின் வீட்டிலிருந்து சுமார் 300 பவுண் நகைகளும், மூன்று லட்சம் ரூபா பெறுமதியான டொலர் பணமும் இரவு வேளையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (27)

# விளையாட்டுப் போட்டி

பூநகரி பல்லவன் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகியது. தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றினார். இந்நிகழ்வு பூநகரி, முழங்காவில் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் இடம் பெற்றது. (34)

### பூநகரி...

தேசியக் கொடியினை பூநகரி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் த. நிருபன் ஏற்றினார்.

தலைமை உரையைத் தொடர்ந்து பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த. நிருபன், பூநகரி தியாக தீபம் மருத்துவமனை வைத்தியர் போராளி தே. நளாயினி, பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் செல்வன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து மதிய போசன நிகழ்வு நடைபெற்றது. இதில் கரும்புலி மாவீரர்களின் ஞாபகார்த்தமாக நினைவுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

### திருவுருவப் படங்களை..

தினத்தை முன்னிட்டு இன்று முதல் கரும்புலிகளின் திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி பவனி இடம்பெற்றது.

இன்று வவுனியா மத்திய நகரில் ஆரம்பிக்கும் இந்த ஊர்தி பவனியில் இதுவரை காலமும் வீரச்சாவடைந்த 241 கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வூர்தியானது எதிர்வரும் யூலை 05 ஆம் திகதி வரையும் வவுனியாவின் பல பகுதிகளிற்கும் எடுத்துச் செல்லப்பட இருக்கின்றது.

மன்னாரில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தாழ்பாடு தேசிய எழுச்சிப் பேரவையால் நடத்தப்பட்ட சிரமதானப் பணியில் அக்கிராம மக்கள் இணைந்து கொண்டார்கள்.

தாராபுரம் வீதி தாழ்பாடு சேமக்காலை சிறுவர் பராமரிப்பு நிலையம் என்பன சிரமதானப் பணி மூலம் செப்பனிடப்பட்டது.

தேசியப் பேரவையினரும், கிராம மக்களும் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டார்கள். இதனை மன்னார்மாவட்டமாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்வழிநடத்தினார். (லோ, 10, மி)

### இடைக்கால...

தில் புலிகள் நம்பிக்கை வைக்கவில்லை.

ஆகவேதான், இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயத்தில் அரசாங்கம் விரைவாகப் பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தூதுவர் பிரதமரிடம் எடுத்துக் கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு...

பெற்ற பின்னர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து, கல்லடி முகாமை நிரந்தரத் தளமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்து மாறும் கோர உள்ளதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

### வடக்கு...

நிரந்தரத் தீர்வொன்றைக்காண அனைவரும் முன்வர வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் அரசியல் சாசனத்திற்கு அமைவாகவும், சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்பட்டால் அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கட்சிகளும் இனவாத அமைப்புக்களும் இந்த முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

### சிங்களப்...

யதார்த்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அர்த்தமற்ற ஒன்றாக மாற்றி வருகின்றது. இதேவேளை, போர் ஓய்வைக் கண்காணித்து சமாதானச் சூழலை வளர்த்தெடுக்கும் இலக்குடன் பணியாற்ற வந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழுவினரும் படையினரின் போர் நிறுத்தமீறல்களைத் தடுத்து நிறுத்தும் திராணியற்றிருக்கின்றனர். எல்லாம் நடந்த பின்னர் பத்திரிகையாளரை அழைத்து செய்தி கூறுவது போல போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களைச் சிறிலங்கா அரசு நடத்துகின்றது.

கடலில் சிங்களப்படைகள் அடுத்தடுத்து நடத்திவரும் அடாவடித்தனங்கள் புலிகளது பொறுமையை அளவுக்கதிகமாகச் சோதித்து விட்டன.

புலிகளின் கடற்கலங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் கண்காணிப்புக் குழுவினரை அழைத்து அவர்கள் கண்முன்னால் சிங்களப்படையினர் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டது. ஆயினும் சிங்கள அரசின் முப்படைகளும் பாராபட்சமின்றி போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு அமைதிப் பேச்சைச் சீர்குலைத்து வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்த முடியாமலும் விரும்பாமலும் சிங்கள அரசு உள்ளது. இந்த நிலையில் சமாதான முயற்சி என்பது சிங்களத் தரப்பால் கைவிடப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது என விடுதலைப்புலிகள் ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உ
சிவமயம்

# நட்டாங்கண்டல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம்

மேற்படி பொங்கல் உற்சவம் சுபானு வருடம் ஆனி 19ஆம் நாள் (04-07-2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகும்.

பகல் 12.00 மணியளவில் அம்பாளுக்கும் காத்தவராய சுவாமிக்கும் விசேட அபிஷேகத்துடன் நண்பகல் பூசை ஆரம்பமாகும். பூசை முடிவடைந்ததும் அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் தொடர்ந்து வழங்கப்படும்.

இரவு 07.00 மணியளவில் அம்பாளும் காத்தவராய சுவாமியும் வீதி உலா சென்று மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து அதிகாலை பொங்கல் பூசை நடைபெறும். அன்றைய தினம் அனைவரும் பங்கு கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி: வன்னி தமிழிசைக் குழுவின் இன்னிசை காரம்.**

**குறிப்பு:-** அன்றைய தினம் ஆலய எல்லைக்குள் அங்கனைப் பொருட்கள் வெளியார் விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது:

அபிஷேகத்திற்கு, உரிய பால், தயிர், இளநீர், பூ, பூமாலை கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விசேட ஒலி, ஒளி அமைக்கப்படும்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**நட்டாங்கண்டல்.**

FI-3219



# தமிழீழ மாவட்ட நீதிமன்று மல்லாவி

வழ.இல : 35/02.
தன்மை : நானாவிதம்.
பெறுமதி : 61,000/=

ஆழ்வார் யோகன்,
சந்தை உட்புறம்,
மல்லாவி.
- வழக்காளி.

ஏரம்பு பூரணம்,
சந்தை உட்புறம்,
மல்லாவி
- எதிராளி.

## இடைக்காலத் தீர்வை

குறித்த வழக்கு வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டு எதிராளி குறித்த வழக்கின் வழக்கறிக்கை, அழைப்பாணை என்பவற்றைப் பெற்று மன்றில் தோன்றி மறுமொழி அணைத்த பின்பு மன்றுக்கு தோன்றாத காரணத்தினால் மன்று குறித்த வழக்கை எதிராளி தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தைச் சரிவர பயன்படுத்தத் தவறியபடியால் குறித்த வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு அனுமதித்தது.

2003ம் ஆண்டு 4ம் மாதம் 3ம் திகதி நீதியாளர் திருமதி. அ.கனிமொழி அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளி சட்டவாளரும் சமுகமாயிருக்க, எதிராளி இவ்வழக்கில் அவருக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை தனது கோரிக்கைகளை நிறைவேற்றப் பயன்படுத்தாது மன்றுக்கு சமுகம் கொடுக்காது இருந்ததை மன்று கருத்திற் கொண்டு ஒருமுக விளக்கத்தின் பிரகாரம் வழக்காளி வழக்கறிக்கையின் நிவாரணப் பகுதியின் உரிமைக் கோரிக்கையைப் பெறும் தகுதியுடையவர் என மன்று வெளிப்படுத்தி வழங்கப்பட்ட தீர்ப்பு இத்தால் இடைக்காலத் தீர்வையாக வழங்கப்படுகின்றது.

ச.லோகநாதன்,
வ/சட்டவாளர். (3414) நீதியாளர்.



# மரண அறிவித்தல்

## பூராசா சின்னமலர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உதயா போட்டோ மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட பூராசா சின்னமலர் 02-07-2003 அன்று வவுனியாவில் காலமானார். அன்னார் பூராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சாமிநாதர் எலுசபேத் ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற லொறி கந்தையா, புவனேஸ்வரி ஆகியோரின் மருமகளும், லீலிமலர் (ஓய்வு பெற்ற தாதி) அருட்சகோதரி யோசேப்பா (நவமலர்-இந்தியா), அல்பிரேட் நெடுந்தீவு ஆகியோரின் சகோதரியும், சுமதி (தாதி - வவுனியா வைத்தியசாலை), கணேஸ் (கனடா),சுரேஸ் (கனடா) ரமேஸ் (பிரான்ஸ்), தினேஸ் (உதயன்), கோமதி ஆகியோரின் தாயாரும், ஜெபதேவி (கனடா), சந்திரகலா (கனடா) ஆகியோரின் மாமியாரும், கவிதனர் (கனடா), அப்பம்மாவும், வரதராசா (கனடா), தனலெட்சுமி (சுவிஸ்), குலசிங்கம் **(C.T.B)**, கமலராணி (தாதி யாழ்ப்பாணம்), மரியபாக்கியம் நெடுந்தீவு, காலஞ்சென்றவர்களான சற்குணம், அருமைநாயகம், சின்னப்பு நாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

**பூ. சுமதி (மகள்)**

(3416)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.